# <u>கடை வாடகை பொது ஏல நிபந்தனைகள்</u>

1. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான சென்னை, மயிலாப்பூர், **Luz church** சாலையில் **Luz corner** அருகில் உள்ள Luz Golden Enclaveல் அமைந்துள்ள சர்வே எண்.1693ல் **தரைதளத்திலுள்ள கடை (விஸ்தீரனம்** 2174.87sqft) மற்றும் **கீழ்த்தளத்திலுள்ள** ஸ்டோர்கள் **(விஸ்தீரனம்** 1170.12sqft) ஆகியவை வணிக பயன்பாட்டிற்காக உள்ளது. அவற்றை உள்ளது உள்ளபடியே வாடகைக்கு விட உத்தேசிக்கப்பட்ட நிலையில் அவற்றை வாடகைக்கு எடுத்துக்கெள்ள விரும்பும் ஏலதாரர்கள் அவற்றை பார்வையிட விரும்பினால் முறையே பின் வரும் நாட்களாகிய 23.03.2025, 30.03.2025, 06.04.2025, 13.04.2025 ஆகிய 4 ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை கட்டடத்தை நேரில் பார்வையிடலாம்.

2. ஏலத்தில் கலந்து கொள்வோர் விண்ணப்ப படிவத்தினை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அலுவலக நாட்களில் மட்டும்(சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிற) 17.03.2025 முதல் 15.04.2025 வரை அலுவலக நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரையிலும் பொறியியல்துறை அலுவலகத்தில் விண்ணப்பபடிவத்தொகையான **ரூ.5000ஐ "பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21"** என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கேட்பு வரைவோலையாகவோ(**Demand Draft) அல்லது NEFT/RTGS முலமாக கணக்கு எண்:10143135395ல்** செலுத்தியோ மற்றும் அதனுடன் **ரூ.900ஐ (18% GSTயுடன்) GST No. 33AAAJM0776B1ZLல் online** மூலம் செலுத்தி ரசீதுடன் பெற்றுக்கொள்ள வேண்டும். எக்காரனத்தினைக்கொண்டும் விண்ணப்ப படிவத்திற்கான தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

3. ஏலம் கேட்க விரும்புவோர் கடை மற்றும் ஸ்டோர்கள் ஆகியவற்றிக்கு நிர்வகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வாடகையில் 1% தொகையை முன்வைப்புத்தொகையாக (EMD) **The Registrar, Madurai Kamaraj University, Madurai** -21 என்ற பெயரில் மதுரையில் மாற்றத்தக்க வகையில் ஏதேனும் ஒரு அரசு வங்கியில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலைவுடன்(**Demand Draft**) **பூர்த்தி செய்யப்பட்ட** விலைப்புள்ளிப் படிவத்தையும் சேர்த்து மூடி முத்திரையிடப்பட்ட உறையினை **16.04.2025ந்தேதி மாலை 3.00மணிக்குள் மதுரை காமராசர் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்**. அதற்குப்பின்பு வரும் விலைப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. விலைப்புள்ளி படிவத்துடன் முன்வைப்புத்தொகை(EMD) கேட்பு வரைவோலை (Demand Draft) இணைக்கப்படாத விலைப்புள்ளி நிராகரிக்கப்படுவதுடன், ஏலத்தில் கலந்து கொள்வதற்கும் அனுமதிக்கப்பட மாட்டாது.

5. ஏலக்கேள்வியானது ஏலத்தில் பங்குபெறுவோரால் சமர்பிக்கப்பட்ட அதிகபட்ச ஏலத்தொகை அல்லது நிர்வாகம் நிர்ணயித்த விலை தொகை இவற்றில் எது அதிகமோ அதனை அடிப்படை ஏலத்தொகையாக நிர்ணயம் செய்து ஏலதாரர்களின் முன்னிலையில் ஏலம் விடப்படும். ஏலம் கேட்போர் விலைப்புள்ளித் தொகையே மிகையான தொகையாக கருதப்பட்டால் அத்தொகைக்கே பல்கலைக்கழக நிர்வாகத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தம் இறுதி செய்யப்படும்.

6. ஏலதாரர் அல்லது ஏலதாரரால் அங்கீகரிக்கப்பட்ட நபர் உரிய அனுமதி கடிதம் மற்றும் அடையாள அட்டையுடனும் (ஆதார்) ஏலத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படும்.

7. ஏலம் முடிந்தவுடன் அதிகபட்சத் தொகையின் ஏலதாரரின் கேட்புவரைவோலை மற்றும் இரண்டாம் நிலை ஏலதாரரின் கேட்புவரைவோலையினை மட்டும் நிறுத்தி வைத்துக்கொண்டு மற்றவர்களின் கேட்பு வரைவோலைகள் திருப்பித் தரப்படும்.

8. ஏலம் அங்கீகரிப்பட்டபின் **ஏலதாரரால் எடுக்கப்படும் ஒவ்வொரு கடையோ அல்லது ஸ்டோர் ஆகியவற்றிக்கு நிர்வாகத்தால் முடிவுசெய்யப்பட்ட** வாடகையின் **<u>மூன்று மடங்கு தொகையை</u>** பிணையத்தொகையாக(**Security deposit)ஆக** மதுரை பல்கலைநகர் பாரத ஸ்டேட் வங்கியில் மதுரை காமராசர் பல்கலைக்கழக கட்டட கணக்கு எண்-10143137234ல் **நிர்வாகம் கொடுத்துள்ள காலக்கெடுவுக்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை (EMD)** திரும்ப **வழங்கப்படாது.**

…...2

9. **கடை மற்றும் ஸ்டோர் ஆகியவற்றில் அரசால் தடை செய்யப்பட்ட பொருட்களை வைத்து வியாபாரம் செய்வதற்கு அனுமதி கிடையாது.** அப்படி ஏதேனும் குற்றச் செயல்கள் கண்டுபிடிக்கும்பட்சத்தில் கடையின் குத்தகை உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் தாங்கள் செலுத்திய முன்வைப்புத்தொகை (EMD) திரும்ப வழங்கப்படமாட்டாது.

10. மேல் குறிப்பிட்டவற்றின் உரிமம் பெற்றவர்கள் மாதவாடகையை பிரதி மாதம் 5-ம் தேதிக்குள் பாரத மாநில வங்கியில்(SBI) கட்டிடக்கணக்கு எண்-10143137234ல் செலுத்தவேண்டும். தவறும்பட்சத்தில் மாதவாடகையில் 5 சதவிகிதம் வீதம் அபராதமாக வசூல் செய்யப்படும்.

11. மேற்குறிப்பிட்ட கடை மற்றும் ஸ்டோர்களில் பயன்படுத்தப்படும் மின்கட்டணத்தொகையை தங்களது சொந்தச் செலவில் மின்வாரிய அலுவலகத்தில் செலுத்திக்கொள்ளவேண்டும். அப்படி செலுத்த தவறும் பட்சத்தில் தமிழக மின் வாரியத்தினால் எடுக்கப்படும் எந்த நடவடிக்கைக்கும் பல்கலைக்கழகம் பொறுப்பேற்காது அதற்குண்டான செலவீனத்தை வாடகைதாரரே எற்றுக்கொள்ளவேண்டும்.

12. கடையின் முன் தற்காலிகக் கட்டிடமோ அல்லது குடிசையோ போடக்கூடாது. கடையை சுத்தமாகவும், நல்ல நிலையிலும் வைத்து உபயோகிக்க வேண்டும்.

13. தங்கள் பொறுப்பிலுள்ள கட்டடங்களுக்கு எவ்வித சேதாரமும் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

14. எக்காரணத்தைக் கொண்டும் கடை மற்றும் ஸ்டோர்களை உள்வாடகைக்கு விடக்கூடாது.

15. **எவ்விதக் காரணமுமின்றி ஏலத்தை ரத்து செய்யவோ, மறு ஏலம் விடவோ அல்லது ஏலம் விட்டபின்பு ஏலத்தை நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு.**

16. மேல் குறிப்பிட்டவற்றில் உள்கட்ட வசதிகள் தேவைப்படின் அவற்றை ஏலம் எடுத்தவரே அவரின் சொந்த செலவில் பல்கலைகழக நிர்வாகத்தின் ஒப்புதல் பெற்று செய்துகெள்ள வேண்டடும்.

17. மேல் குறிப்பிட்டவற்றினை காலிசெய்ய நேரிட்டால் நிர்வாகத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்பே தெரிவித்து முன் அனுமதி பெறவேண்டும்.

18. மேல் குறிப்பிட்டவற்றின் தவணைக்காலம் முடிந்தவுடன் எவ்வித ஆட்சேபனையுமின்றி கடையை காலி செய்து தர வேண்டும்.

19. தொடரும்பட்சத்தில் வாடகையானது ஒவ்வொரு மூன்று ஆண்டு கால இறுதியில் அரசாங்கத்தின் விலை மதிப்பீட்டுக்குகேற்ப மாற்றி அமைக்கபடும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான சென்னை, மயிலாப்பூர், **Luz church** சாலையில் **Luz corner** அருகில் உள்ள Luz Golden Enclaveல் அமைந்துள்ள

**தரைதளத்திலுள்ள கடை(2174.87sqft) மற்றும் கீழ்த்தளத்திலுள்ள ஸ்டோர்கள்(1170.12sqft)** நடத்திக்கொள்வதற்கு மாதவாடகை உரிம ஒப்பந்தப் பொது ஏலம். (பொதுத்துறை நிறுவன அலுவலகங்கள், பொதுத்துறை வங்கிகள் உள்ளிட்ட வணிக பயன்பாட்டிற்காக மட்டும்)

நாள்:16/04/2025 நேரம்:3.30pm இடம்:-ம.கா.பல்கலைக்கழகம் பதிவாளர் அலுவலகம்

விபரங்களுக்கு:- பல்கலைக்கழகப் பொறியியல்துறை, ம.கா.பல்கலைக்கழகம், மதுரை -21

தொலைபேசி எண்: DDE Director i/c:9944627858, P.A to Registrar:9092533074,
Estate Officer i/c: 9442018866

விபரங்களுக்கு **Website**: https://mkuuniversity.ac.in

## Commercial Space for Rent

Property of Madurai Kamaraj University located at Luz corner, Luz Church Road, Luz Golden Enclave, Mylapore, Chennai

**Ground Floor Shop (2174.87Sqft) and Basement Floor Stores (1170.12Sqft) Public auction (Rented to Public Sector office and Public Sector Banks only).**

**Venue**: Registrar's Chamber, Madurai Kamaraj University, Madurai -21.

**Date**: 16/04/2025 **Auction time**: 3.30pm

**Contact Address**: Engineering Department, Madurai Kamaraj University, Madurai-21

**Phone no**: DDE Director i/c: 9944627858,
P.A to Registrar: 9092533074,
Estate Officer i/c: 9442018866

**Website**: https://mkuuniversity.ac.in for further details